1987 ஏப்ரல் 22]

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, திரு. இளையபெருமாள் தனி யாகவும், பினாமி மூலமும் அந்த சொத்துக்களை நாளது வரையில் நிர்வாகம் செய்து வருகிறார். நான் ஏற்கெனவே சொன்னபடி ஆதிதிராவிட மாணவ மாணவியர்களுக்காக சிதம்பரம் தாலுக்காவில் ஒரு தொழிற் கூடம் அமைக்க அரசு ஆய்வு செய்து கொண்டிருக்கிறது.

திரு. ஆர். எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களின் பெருந்தலைவராகவும் ஒரு சுவாமிஜியாகவும் இருந்த சுவாமி சகஜானந்தா அவர்களால் நந்தனார் மடம் ஆரம்பிக்கப்பட்டு பேரோடும், புகழோடும் நடை பெற்று வந்தது. அந்த மடத்தை அதே பெயரிலே ஆதி திராவி டர்களைக் கொண்டு நடக்கக் கூடிய நிலையிலே, ஆதி திராவிடர் நலத் துறையிலே நடத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11.00)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, காலஞ்சென்ற ஸ்வாமி சகஜாநந்தா அவர்கள் பெயரை அந்தக் தொழிலியல் கூடத்திற்கு வைக்கவும், ஆதி திராவிட சமூகத்தைச் சேர்ந்த பெரியவர்கள், நல்லவர் களைக் கொண்டுதான் அந்த வருமானத்தை நிர்வகிக்கவும் அரசு நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது.

கால்நடை ஆய்வாளர் பயிற்சி.

454—(*வினா எண். 7716) திரு. கோ. இரகுபதி: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கால்நடை ஆய்வாளர் பயிற்சியை மீண்டும் துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1976-க்குப்பின் நிறுத்தி வைக்கப் பட்ட கால்நடை ஆய்வாளர் பயிற்சி, 1981-ல் மீண்டும் துவக்கப் பட்டது. 1981—82-ல் 100 தடுப்பூசியாளர்களுக்கும், 1984—85-ல்

99 தடுப்பூசியாளர்களுக்கும், 1985—86-ல் 82 தடுப்பூசியாளர் களுககும, கால்நடை ஆயவாளா 11 மாதப்பயிற்சி அளிககப் பட்டது. மீண்டும் 125 பேர்களுக்கு கால்நடை ஆய்வாளர் பயிற்சி அளிக்க ஆணையிடப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி கீரமங்கலத்தில் கால்நடை மருத்துவமனை.

455—(*வினா எண். 8120) திரு. அ. வெங்கடாசலம்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி தொகுதி, கீரமங்கலத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், வரும் நிதியாண்டில் துவங்கப்படுமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கீரமங்கலத்தில் ஏற்கனவே ஒரு கால்நடை மருந்தகம் இயங்கி வருகிறது. இக் கால்நடை மருந்தகத்தை, மருத்துவ மனையாக உயர்த்தும் திட்டம் எதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

தஞ்சை மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், எழுமகளூர் ஸ்ரீமாரியம்மன் ஆலயத் திருப்பணி.

456—(*வினா எண். 10537) திரு. பாப்பா சுப்பிரமணியன்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், எழுமகளூர் ஸ்ரீமாரியம்மன் ஆலயத் திருப்பணிக்கு அரசு மான்யம் அளிக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.